DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, COONOOR

**Case No: STC 453/2026**

Prosecution witness **PW.2 (LW.6)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | Baskaran | Caste | : | |
| Father Name | : | Annamalai | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | 55 |
| Time | : | | | | |

**(A1, A2 absent. Petition filed and allowed for A1, A2. Accused counsel present)**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of **13.07.2026**

**13.07.2026 முதல் விசாரணை** :

1. நான் தற்போது குன்னூர் நகர காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து புலன் விசாரணை மேற்கொண்ட உதவி ஆய்வாளர் திருமதி.சரோனியா உதகை மாவட்ட சிங்கப்பெண் அதிரடி படைக்கு பணிமாறுதல் அடைந்து சென்றுவிட்டதால் நான் இவ்வழக்கில் ஆவணங்களை பார்த்து சாட்சியமளிக்கிறேன். கடந்த 29.03.2026 ம் தேதி உதவி ஆய்வாளர் சரோனியா நிலைய அலுவலில் இருந்த போது ரெவீன்குமார், குன்னூர் நகர கிராம நிர்வாக அலுவலர் என்பவர் நிலையம் ஆஜராகி அன்றைய தினம் மதியம் 13.30 மணியளவில் அவரும் அவரது கிராம உதவியாளர் அப்துல் மஜித் ஆகியோர் குன்னூர் நகர பகுதியில் கள ஆய்வில் இருந்த போது குன்னூர் மவுண்ட் ரோடு டாக்ஸி ஸ்டான்ட் அருகில் அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்ற கழக நகர செயலாளர் சரவணக்குமார் அவருடன் 50 நபர்களுடன் அதிமுக வேட்பாளர் வரவேற்பு நிகழ்ச்சி நடத்திக்கொண்டிருந்த போது எளிதில் தீப்பற்ற கூடிய பட்டாசுகளை தமிழரசன் என்பவர் மூலம் எவ்வித அனுமதியும் பெறாமல் அசட்டையாக வெடிபொருளை வெடித்த நபர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு அன்றைய தினம் நிலையத்தில் இருந்த உதவி ஆய்வாளர் திருமதி.சரோனியா

அவர்களிடம் கொடுத்த புகாரை பெற்று குன்னூர் நகர காவல் நிலைய குற்ற எண்.54/2026 சட்டப்பிரிவுகள் 287 BNS ன் கீழ் வழக்கு பதிவு செய்துள்ளார். (**அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). முதல் தகவல் அறிக்கையையும் புகாரையும் இணைத்து நீதித்துறை நடுவர், குன்னூர் அவர்களுக்கு அனுப்பியும், இதர நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பியும், ஒரு நகலை அவரது புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவயிடத்திற்கு அன்றைய தினமே சென்று சாட்சிகள் ரெவீன்குமார், கிராம நிர்வாக அலுவலர், கிராம உதவியாளர் அப்துல் மஜித், முருகன், ராஜஷ்குமார் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

2. பின்னிட்டு எதிரிகளுக்கு பிரிவு 35 (3)ன் கீழ் அறிவிப்பு அனுப்பி விசாரணை மேற்கொண்டுள்ளார். சம்பவம் உண்மை என தெரியவந்ததால் 13.05.2026 ம் தேதி எதிரிகள் மீது மேற்படி சட்டப்பிரிவுகளின் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

<u>குறுக்கு விசாரணை</u>

கிராம நிர்வாக அலுவலர் அ.,சா.ஆ.1 புகாரை அவரது அலுவலக கோதாவில் கொடுத்துள்ளதால் அந்த புகாரில் கிராம நிர்வாக அலுவலக முத்திரை இட்டிருக்க வேண்டும் என்றும், ஆனால் அந்த முத்திரை இல்லாமல் நாங்கள் அ.சா.ஆ.1 புகாரை பெற்றுள்ளோம் என்றால் சரிதான். இது முறையற்ற புகார் என்றும், அவசரப்பட்டு நாங்கள் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளோம் என்றும் சொன்னால் சரியல்ல. நான் சம்பவயிடத்திற்கு சென்றதாக கூறுவதற்கு பட்டாசு துகள்களை கைப்பற்றினேனா என்றால் இல்லை. நான் சம்பவயிடத்திற்கே செல்லவில்லை என்றும், வழக்கு ஆவணங்களை காவல் நிலையத்திலேயே வைத்து தயாரித்துள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல. சம்பவம் நடந்த இடத்திற்கு அருகில் எங்களது கேம்ப் ஆபிஸ் உள்ளது என்றால் சரிதான். இவ்வாறு ஒரு சம்பவம் நடந்திருந்தால் எங்கள் காவல் நிலைய கேம்ப்

ஆபிஸிலிருந்தே எங்களுக்கு தகவல் கொடுக்கப்பட்டிருக்கும் என்றும், அ.சா.1 புகார் கொடுத்திருக்க வேண்டிய அவசியமில்லை என்றும் சொன்னால் சரியல்ல. நான் சொன்ன மாதிரி எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றும், புள்ளிவிவர கணக்கிற்காக நாங்கள் பொய்யான புகாரை பெற்று வழக்கு பதிவு செய்துள்ளோம் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u> –** இல்லை.

Sd/- Tmt.R.Geetha B.A. B.L.,
Judicial Magistrate (FAC),
Coonoor.